# சுபிட்சமான வாழ்விற்கு பயனுள்ள வழிகள்

மூலம்
அஷ்-ஷைக், அப்துர் ரஹ்மான் பின் நாஸிர் அஸ்-ஸஅதீ (ரஹ்)

தமிழில்
*முஹம்மத் ஹுஸைன் அபூதாஹிர்*

**வெளியீடு:**
**பிரசுரிப்பு, அறிவியல் ஆய்வுத் திணைக்களம்**
**இஸ்லாமிய அழைப்பு வழி காட்டல், வக்பு,**
**அலுவல்கள் அமைச்சு 1435 H ஹிஜ்ரி**

ح وزارة الشؤون الإسلامية والأوقاف والدعوة والارشاد، ١٤٢٨ هـ

*فهرسة مكتبة الملك فهد الوطنية أثناء النشر*

ابن سعدي. عبدالرحمن

الوسائل المفيدة في الحياة السعيدة - الرياض.

٤٨ص ؛ ١٧سم

ردمك : ٩-٣٧٦-٢٩-٩٩٦٠

(النص باللغة التاميلية)

١- الوعظ والإرشاد ٢- الدعوة الإسلامية أ- العنوان

ديــــوي ٢١٣ ٣٢٨١ ٢٢

رقم الإيداع : ٣٢٨١ / ٢٢

ردمك : ٩-٣٧٦-٢٩-٩٩٦٠

الطبعة الثالثة عشرة

١٤٣٥ هـ

# சுபிட்சமான வாழ்விற்கு
# பயனுள்ள வழிகள்

بسم الله الرحمن الرحيم

## நூலாசிரியரைப்பற்றி...

நமது கரங்களில் தவழும் இச்சிறு நூல் உண்மையான ஈடேற்றத்திற்குரிய அடிச்சுவடுகளை முன்வைக்கிறது. அந்த ஈடேற்றமே மனிதன் முயற்சித்துத் தேடும் விடயமாகும். அந்த சுபிட்சம் தான் திருமறையின் ஆதாரங்கள், நபிவழியின் வழிகாட்டல்களினாலான அடிச்சுவடுகளின் அடையாளத்திலே உறுதி செய்யப்பட்டதுமாகும். அதுதான் ஒரு மு.ஃ.மின் ஆதரவு வைக்கும் சுபிட்சமும், ஈமானிய சமூகம் வாழும் சுபிட்சமுமாகும். ஏனெனில் அந்த ஈடேற்றம் மட்டுமே மூமினின் வாழ்வினில் அவனது பாதையை அல்லாஹ்வின் அச்சத்தின் மீதும், அவனது திருப்தியின் மீதும் ஒருங்கே அமையச் செய்யும் ஒரே வழியாகும்.

இச்சிறு நூலை உங்களுக்காக சங்கைக்குரிய அல்லாமா அஷ்ஷைக் அப்துர்ரஹ்மான் பின் நாஸிர் பின் அப்துல்லாஹ் அஸ்ஸஅதீ (ரஹ்) அவர்கள் தொகுத்து வழங்கியிருக்கிறார்கள். இவர்கள் சவூதி அரேபியாவில் நஜ்த் தேசத்தில் கஸீம் மாகாணத்தின் உனைஸா எனும் நகரிலே பிறந்தார்கள். சிறு வயதிலேயே பெற்றோரை இழந்தாலும் அறிவு, மதி நுட்பத்திலும் கல்வியைத் தேடுவதிலும் சிறந்தவராக விளங்கினார்கள். தன் பால்ய வயதிலேயே மாமறை திருக்குர்ஆனை மனனமிடத் துவங்கி தனது பன்னிரண்டாவது வயதிலேயே அதை முழுமை செய்தார்கள். பின்பு மார்க்கக் கல்வியைக் கற்கத் துவங்கினார்கள். தனது ஊரிலுள்ள அறிஞர்களிடம் மட்டுமின்றி பிற பகுதிகளிலிருந்து வந்த சிறந்த மார்க்க

அறிஞர்களிடமும் தேவையான கல்வியைக் கற்றுக் கொண்டார்கள். கல்வியிலும், அறிவு ஞானத்திலும் பெரும் பங்கை அடையும்வரை அறிவு தேடுவதில் அன்னார் மாபெரும் முயற்சியை மேற்கொண்டார்கள்.

தமது இருபத்திமூன்றாம் வயதில் அறிவைத் தேடு வதிலும், அதைக் கற்பித்தலிலும் தானும், பிறரும் பயன்பெறும் வகையில் தனது பணியை ஒருங்கிணை க்கத் துவங்கினார்கள். அன்னார் தன் வாழ்நாள் முழு வதையுமே இதற்காக அர்ப்பணித்தார்கள். இவர்கள் மூலம் அதிகமானோர் பெரும் பலனையடைந்தார்கள்.

### *அன்னாரின் ஆசான்கள்*

1- ஷைகு இப்றாஹீம் பின் ஹமத் பின் ஜாஸிர் அவர்கள். (இவரே நூலாசிரியரின் முதலாசிரியர்).

2- உனைஸாவின் பிரபல காழி ஷைக் ஸாலிஹ் பின் உஸ்மான் அவர்கள். உஸூல், பிக்ஹ், தவ்ஹீத், தப் ஸீர், அரபி இலக்கியம் ஆகிய கலைகளை அன்னார் இவர்களிடமே கற்றார்கள். அவர்களது மரணம் வரை அன்னார் இவர்களுடன் தொடர்ந்து இருந்தார் கள். ஷைக் (நூலாசிரியர்) அவர்கள் ஃபிக்ஹிலும், உஸூலுல் ஃபிக்ஹிலும் முழுஞானம் உடையவர் களாக இருந்தார்கள். பிரபலமான நூல்களில் கவனம் செலுத்தியதாலும், குறிப்பாக இப்னு தைமிய்யா, இப்னுல் கய்யிம் போன்றோரது நூற்களுக்கு முக்கி யத்துவம் அளித்ததினாலும் தவ்ஹீதிலும் பரிபூரண அனுபவ ஞானம் பெற்றவர்களாக அன்னார் இருந் தார்கள். அவ்வாறே தஃப்ஸீர் மற்றும் அது

சம்பந்தமான ஏனைய கலைகளிலும் அன்னாருக்கு அதிக ஞானமும் நீண்ட அனுபவ மும் இருந்தது.

த.ஃ.ப்ஸீர் கலையில் அன்னார் பல நூற்களை இயற்றியுள்ளார்கள்.

அவையாவன:

1- தைஸீருல் கரீம் அல்-ரஹ்மான் பீத.ஃ.ப்ஸீரி கலா மில் மன்னான் (8 பகுதிகள்).

2- தைஸீருல் லதீ.ஃ.பில் மன்னான் பீ குலாஸதி த.ஃ.ப்ஸீரில் குர்ஆன்.

3- அல்-கவாயிதுல் ஹிஸான் லித.ஃ.ப்ஸீரில் குர்ஆன்.

***அன்னாரின் பயன்மிகு ஏனைய நூற்கள்:***

4- அல்-இர்ஷாது இலா ம.ஃ.ரிபதில் அஹ்காம்.

5- அர்ரியாளுன் நாழிரா.

6- பஹ்ஜது குலூபில் அப்ரார்.

7- மன்ஹஜுஸ் ஸாலிகீன் வதவ்ளீஹுல் .ஃ.பிக்ஹி பித்தீன்.

8- ஹுக்மு ஷுர்பித் துகான் வபைஇஹி வஷிராஇஹி.

9- அல்-பதாவா அஸ்ஸ.ஃ.திய்யா.

10- மின்பர் குத்பாக்கள்.

11- அல்-ஹக்குல் வாளிஹுல் முபீன் பி ஷரஹி தவ்ஹீதில் அன்பியாயி வல் முர்ஸலீன்.

12-தவ்ளீஹுல் காபியத்திஷ் ஷா.ஃ.பிய்யா (நூனிய் யத்து இப்னில் கய்யிம்)

மேலும் ஃ.பிக்ஹ், தவ்ஹீத், ஹதீஸ், உஸூல், சமூக ஆய்வுகள், பலதரமான ஃ.பத்வாக்கள் ஆகிய கலைகளில் அதிகமான நூற்களை அன்னார் இயற்றியிருக்கின்றார்கள்.

***அன்னாரின் மறைவு***

திடீரென கடும் நோயினால் பீடிக்கப்பட்ட அன்னார் ஹிஜ்ரி 1376-ம் வருடம் ஜமாதுல் ஆகிர் 23-வியாழக் கிழமை இரவு அவர்களைப் பற்றி அறிந்த, அவர்களி ளிடம் கற்ற, நல்லுபதேசங்களை கேட்ட அனைவரது நெஞ்சங்களையும் ஆழ்ந்த கவலையில் ஆழ்த்தி விட்டு உனைஸாவில் வபாத்தானார்கள்.

அல்லாஹ் அவர்களுக்கு விசாலமான தம் பேர ருளை அள்ளித்தருவானாக! அவர்களது கல்வி யின் மூலமும் அவர்களது நூற்களின் மூலமும் நம் அனைவருக்கும் நற்பயன் நல்குவானாக!

ஆமீன்.

* * *

## ஆசிரியரின் முன்னுரை

அனைத்து புகழுக்கும் தகுதி வாய்ந்த அல்லாஹ் வுக்கே புகழனைத்தும் உண்டாவதாக! மேலும் அவனைத் தவிர வணக்கத்திற்குரிய வேறு இறை வன் இல்லை. அவன் தனித்தவன். அவனுக்கு இணைதுணை இல்லையென நான் சாட்சி கூறுகிறேன் மேலும் முஹம்மது (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் அடியாரும், திருத்தூதருமாவார்கள் என்றும் நான் சாட்சி கூறுகிறேன். அவர்கள் மீதும், அவர்கள் குடும்பத்தினர் மீதும், தோழர்கள் மீதும் அல்லாஹ் வின் ஸலவாத்தும், ஸலாமும் உண்டாவதாக!

நிச்சயமாக மன நிம்மதி, அதன் சந்தோஷம், மனம் கவலை, சஞ்சலங்களிலிருந்து நீங்கியிருத்தல் இது தான் அனைவரின் நோக்கமாகும். இதனால்தான் அழ கிய வாழ்வுஏற்பட்டு களிப்பும்,சந்தோஷமும் முழுமை பெறுகிறது. இதற்கு மார்க்க ரீதியான காரணங்கள், இயற்கை ரீதியான காரணங்கள், செயல் ரீதியான காரணங்கள் எனப் பல காரணங்கள் இருக்கின்றன. இவையனைத்தும் மு.ஃ.மினான மனிதனிடமேயன்றி பிறரிடம் ஒருங்கிணைந்திருப்பது சாத்தியமாகாது. மு.ஃ.மின்களல்லாதாரிடம் ஏதேனுமொரு வகையில் அவர்களது அறிஞர்களின் முயற்சியினால் அதை அடையப் பெற்றாலும் பல விதங்களில் அதை விட முடிவாலும், சூழ்நிலையாலும் மிகச்சிறந்த, நிலையான, மிகப் பயனுள்ள பல விடயங்கள் அவர்களுக்கு கிடைக்காமல் தவறிப் போகின்றன.

எனினும் ஒவ்வொருவரும் தீவிரமாக முயற்சிக்கின்ற இவ்வுயரிய நோக்கத்திற்குரிய காரணங்களில் எனக்குத் தெளிவானவைகளை இச்சிறு நூலில் தொகுத்துக் குறிப்பிட்டுள்ளேன்.

அக்காரணங்களில் அதிகமானவைகளைத் தன்னகத்தே கொண்டு அழகிய ஒரு வாழ்வு வாழ்ந்து, தன் வாழ்வை சிறப்பாக்கிக் கொண்டோரும் உண்டு. இவைகளை விடுத்து இழிவான வாழ்க்கை வாழ்ந்து தன் வாழ்வை துர்பாக்கியமாக்கிக் கொண்டோரும் உண்டு. இரண்டுக்கும் இடைப்பட்ட வாழ்க்கை வாழ்பவர்களும் உண்டு.

அல்லாஹ்வே அனைத்து விதத் தீங்கைத் தடுப்பதிலும், அனைத்து நன்மைகளுக்கும் உதவி தேடப்படுவனும், பேருபகாரியுமாவான்.

****

## இறை நம்பிக்கையும், நற்செயல்களும்

1- சுபிட்சமான வாழ்வை அடைவதற்குரிய காரணங்களில் அதி மகத்துவமுடையதும், அடிப்படையும், முக்கியத்துவமும் வாய்ந்ததாக இருப்பது இறை நம்பிக்கையும், நற்செயல்களுமாகும்.

அல்லாஹ் தன் திருமறையில் கூறுகின்றான்:
'ஆணாயினும், பெண்ணாயினும் மு.்.மினாயிருந்து யார் (சன்மார்க்கத்திற்கு இணக்கமான) நற்செயல்களைச் செய்தாலும் நிச்சயமாக நாம் அவர்களை (இவ்வுலகில்) மணமிக்க தூய வாழ்க்கை வாழச் செய்வோம். அவர்களுக்கு அவர்கள் செய்து கொண்டிருந்தவற்றிலிருந்து மிகவும் அழகான கூலியை நிச்சயமாக நாம் கொடுப்போம்'. (நஹ்ல் : 97)

மேற்குறிப்பிடப்பட்டுள்ள திருவசனத்தில் ஈமானையும், நல்லமல்களையும் எவர் ஒருசேரப் பெற்றிருக்கிறாரோ அவர்களுக்கு இவ்வுலகில் அழகிய வாழ்வைத் தருவதாகவும், இம்மையிலும், மறுமையிலும் அழகிய நற்பாக்கியங்களைத் நல்குவதாகவும் அல்லாஹ் வாக்களித்துள்ளான்.

அதன் காரணம் தெளிவானது: ஏனெனில் இம்மை, மறுமை, குணங்கள், மனங்கள் ஆகியவற்றை நெறிப்படுத்திடும் நல்லமல்களைப் பிரதிபலிக்கச் செய்யும் உறுதியான ஈமானாக அல்லாஹ்வை ஈமான் கொண்ட மு.்.மின்களுடன் சில அடிப்படைகளும், அஸ்திவாரங்களும் இருக்கின்றன. அவர்கள் தங்கள்

வாழ்வில் குறுக்கிடுகின்ற சந்தோஷம் மற்றும் உவகை தருபவை, கவலை, சஞ்சலம், கலக்கம் தருபவை ஆகிய அனைத்தையும் அதன் மூலமா கவே சந்திக்கிறார்கள்.

சந்தோஷம் மற்றும் விருப்பத்திற்குரிய காரியங்க ளை, அதற்காக இறைவனுக்கு நன்றி பாராட்டுவதன் மூலமும், தமக்கு பயனளிக்கும் வகையில் அதைப் பயன்படுத்துவதன் மூலமும் அதற்கேயுரிய பாங்கில் அதனை எதிர் கொள்கிறார்கள். இவ்வாறாக அவர் கள் அவைகளைப் பயன்படுத்திக் கொள்ளும்போது ஏற்படுகின்ற பேருவகை, அது நீடித்திருப்பதிலும் அதன் பரக்கத்திலும் ஆசை, நன்றியாளர்க்கேயுரிய நன்மையின்மீது பற்று ஆகியவை, சிறப்பிலும், சுபிட்ச த்திலும் உன்னத பிரதிபலனை ஏற்படுத்தித் தருகி றது. இவ்வழிமுறையே அதற்குரிய பெரும்பலனாகும்.

மேலும் தீங்கான, வெறுக்கத்தக்க, கவலை மற்றும் சஞ்சலம்தரும் காரியங்களை அவைகளில் ஈடுசெய்ய முடியுமானவற்றை ஈடுசெய்தும், குறைத்துக் கொள்ள முடியுமானவற்றைக் குறைத்தும், பொறுத்தே ஆக வேண்டுமென்பவற்றை அழகாகப் பொறுத்தும் சந் திக்கின்றனர். ஆகவே இச்சங்கடங்களின் அடையா ளங்களால் அனுபவமும், பலமும், பயனுமுள்ள உறுதிப் பாடுகளும், பொறுமை, நற்கூலியை நாடுதல் ஆகியவையும், சஞ்சலங்கள், வெறுக்கத் தக்கவை கள், துச்சமாய்ப் போகும் மகத்தான காரியங்களை அவர்களுக்கு ஏற்படுத்துகிறது. அவ்வாறான துன்பத் தினை சந்தோஷமும், அழகான நல்லெண்ணங்

களும், மேலும் அல்லாஹ்வின் உபகாரத்திலும் நன்மையிலுமான ஆசையும் இடம்பிடிக்கிறது.

இது பற்றி பெருமானார் (ஸல்) அவர்கள் ஒரு ஸஹீஹான ஹதீஸில் கூறுகின்றார்கள்: 'ஒரு மு.்.மினின் விடயம் வியப்பிற்குரியதாக இருக்கின்றது. தனது காரியம் முழுவதும் அவனுக்கு நன்மையா கவே இருக்கின்றது. அவரை சந்தோஷங்கள் வந்த டைந்தால் அதற்காக இறைவனுக்கு அவர் நன்றி செலுத்துகின்றார். அது அவருக்கு நன்மையை தருவ தாக ஆகி விடுகிறது. தீங்கானவைகள் அவரை வந் தடைந்தால் அதற்காக அவர் பொறுமை செய்கின் றார். அது அவருக்கு நன்மையானதாக ஆகிவிடுகி றது. இது மு.்.மினான அடியாருக்கன்றி வேறெவருக் கும் அத்தகைய பயன் கிடைப்பதில்லை.(முஸ்லிம்)

மேற்கூறப்பட்ட ஹதீஸில் பெருமானார் அவர்கள் நிச்சயமாக ஒரு மு.்.மினுடைய வாழ்வில் குறுக்கி டுகின்ற நன்மைகள், தீமைகள் ஒவ்வொன்றிலும் அவனது அமல்களின் நன்மையும், சிறப்பும் பன் மடங்காகி விடுகிறது எனக் குறிப்பிட்டுள்ளார்கள்.

இதனால் சந்தோஷம், துக்கம் ஆகிய குறுக்கீடு கள் ஏற்படும் இருவரை நீ பார்க்கின்றாய். அவ்விருவரும் மாபெரும் விதத்தில் வேறுபடுகி றார்கள். அந்த வித்தியாசம் நல்லமலிலும், ஈமானி லும் அவ்விருவ ருக்குமுள்ள ஏற்றத் தாழ்வினைப் பொறுத்ததாகும்.

நாம் மேலே குறிப்பிட்ட நன்றி செலுத்துதல், பொறுமை மேலும் அவை தொடர்பானவைகள் ஆகி யன மூலம் நன்மையையும், தீமையையும் சந்திக் கின்ற இவ்விரு தன்மைகளைக் கொண்டு வர்ணிக் கப்பட்ட மு.ஃ.மினானவருக்கு உள மகிழ்வும், சந்தோ ஷமும், தீயவாழ்வு, உளநெருக்கடி, கவலை, சஞ்ச லம் இல்லாத நிலையும் ஏற்படுகிறது. மேலும் இவ்வுலகில் அவருக்கு மகத்துவமிக்க அழகிய நல் வாழ்வு பூரணமாகி விடுகிறது.

மு.ஃ.மினல்லாத மனிதன் மகிழ்வுக்குரிய விடயங் களை மிகக் கெடுதியோடும், வரம்பு மீறியும், அள விலாப் பேருவகையுடனும் சந்திக்கிறான். இதனால் அவனது குணநலன்கள் மாறிவிடுகின்றது. கடும் பேராசையோடும், அச்சத்துடன் (மன நிம்மதியற்ற நிலை) அருவருக்கத்தக்க விதத்திலும் மிருகங் களைப் போன்று அந்த உவகை நிலையை எதிர் கொள்கிறான். ஆயினும் அவன் உள்ளம் நிம்மதி யிழந்து விடுகிறான். மேலும் பல வழிகளில் உள் ளம் அலைக்கழிக்கப்பட்டவனாக இருக்கின்றான். தான் பிரியப் பட்டவைகள் தன்னை விட்டு நீங்கிப் போய்விடுமோ என பீதியுறுதல், பெரும்பாலும் அதனால் ஏற்படுகின்ற குறுக்கீடுகள் அதிகரித்தல் ஆகியவற்றால் இவ்வலைக்கழிப்பு ஏற்படுகிறது. மே லும் உள்ளங்கள் ஒரு எல்லையுடன் நின்று விடா மல் இன்னும் பல விடயங்களின் மீதும் நீங்காத நாட்டம் கொண்டதாக ஆகி விடுகிறது. சிலவேளை அது கிடைக்கலாம், கிடைக்காதும் விடலாம். இறை

விதிப்படியும், இறை நாட்டத்தின் படியும் அது கிடைத்துவிட்டாலோ மேலே நாம் குறிப்பிட்டவாறு அதுவும் அவனைப் பொறுத்தவரை கவலைக்குரிய தாகவே மாறிவிடுகிறது.

மேலும் இவன் தீங்கான விடயங்களை பயத்து டனும், சலிப்புடனும், கவலை, கலக்கத்துடனும் எதிர்கொள்கிறான். எனவே இவனுக்கு ஏற்படுகின்ற கெட்ட வாழ்வு, நரம்பு சம்பந்தப்பட்ட, சிந்தனை ரீதியான நோய்கள், பெரும் பழிப்பிற்குரிய இடை யூறுகளின் பாலும், கீழ்நிலையின்பாலும் கொண்டு செல்லும்படியான பயம் இவைகளைப் பற்றி நீங்கள் கேட்கவே வேண்டாம். காரணம் அவன் நன்மையை ஆதரவு வைக்கமாட்டான். அவனது கஷ்டங்களை இலகு வாக்கும்படியான, ஆறுதல் தரும்படியான பொறுமையும் செயல்பாடுகளும் அவனிடமில்லை.

இவையனைத்துமே அனுபவ ரீதியாகக் கண்டவை யாகும். இவ்வாறான வகுப்பைச் சார்ந்த ஒருவனை மக்களுடைய நிலைகளுடன் வைத்து ஆழ்ந்து கவ னித்தால், தன் ஈமானின் தேட்டத்திற்கேற்ப செயல் படும் ஒரு முஃமினுக்கும், அவரைப் போலல்லாத பிற மனிதருக்கும் இடையில் மாபெரும் வித்தியாசத் தைக் காணலாம். ஏனெனில் சன்மார்க்கம் அல்லாஹ் தான் ரிஸ்கிலும், அவன் அடியார்களுக்கு கொடுத் துள்ள பலவிதமான உபகாரங்கள், சிறப்புகள் விட யத்தில் தனக்குக் கிடைத்ததைக் கொண்டு திருப்தி அடைவதை அதிகமாக அவனுக்கு தூண்டுகிறது.

ஒரு மு.".மின் ஏழ்மையினாலோ நோயினாலோ அல்லது உலகில் யாவருக்கும் ஏற்படும் ஏனைய வாழ்வியல் குறுக்கீடுகளினாலோ சோதனைக்குள் ளாக்கப்படின், உடனே அவரது போதுமென்ற மனம், அல்லாஹ் எதனை அளித்திருக்கின்றானோ அதன்மீது திருப்தியுறும் தன்மை ஆகியவற்றின் காரணமாக அவரைக் கண் குளிர்ச்சியானவராகக் காணலாம். அவர் தனக்கு ஏற்பாடு செய்யப்படாத காரியத்தை ஒருபோதும் நாட மாட்டார். தனக்குக் கீழ் நிலையிலுள்ளவரையே கவனிப்பார். தன்னை விட மேல்நிலையில் இருப்பவரைப் பார்க்க மாட்டார். உலகத்தின் அனைத்து தேவைகளையும் அடைந்து கொண்டு, போதுமென்ற மனம் கொடுக்கப்படாத மனிதரை விட இவரது சுகமும், சந்தோஷமும், மகிழ்வும் சிலவேளை அதிகமாகவே இருக்கும்.

அதுபோன்று ஈமானின் அடிப்படையில் அமல் செய் யாத மனிதர் சிறிதளவு வறுமை அல்லது உலகாதா யங்களில் சிறிது தவறிப் போகுதல் ஆகியவற்றால் சோதனைக்காளானால் வாழ்வில் அதிக வெறுப்புற்று துரதிர்ஷ்டத்தின் இறுதியில் அவர் இருப்பதைக் காணலாம்.

மற்றுமொரு உதாரணம்: பயத்திற்குரிய காரணங்கள் ஏற்பட்டால், இடையூறுகள் மனிதனை வந்தடைந் தால் அந்நேரத்தில் சரியான இறை நம்பிக்கை, சரி யான இறையச்சம், நிலையான உள்ளம், ஆத்ம நிம்மதி, உடையவனை திடீரென வருகின்ற இத்த கைய விடயங்களை, தம்மால் எவ்வளவு தூரம்

இயலுமோ அந்த அளவு தூரம் தம் சொல்லாலும், செயலாலும்,சிந்தனையாலும் அவற்றைப் புறந்தள்ளி, இலகுவாக்கிக் கொள்வதற்கு முடியுமானவராகக் காண முடியும். அவர் துன்பமும், இடையூறுமளிக் கின்ற இத்தகைய விடயங்களுக்கு தன் ஆத்மா வைத் தயார் படுத்தியிருப்பார். இவைகளே மனித னின் உள்ளத்தை நிலைப்படுத்தி, அவனுக்கு சுகமளிக்கும் நிலைகளாகும்.

அவ்வாறே இறை நம்பிக்கையற்றவரை இந்நிலைக்கு முற்றிலும் மாறுபட்ட நிலையில் காணலாம். பீதியான சம்பவங்கள் நிகழ்ந்து விடுமேயானால் அவரது உள் மனம் சங்கடத்திற்கு உள்ளாகி விடுகிறது. அவரது நரம்புகளெல்லாம் செயலிழந்து, அவரது சிந்தனை அலை பாய்கிறது. அவருக்குள் பயமும், திடுக்கமும் ஏற்பட்டு விடுகிறது. வெளிப்படையான பயமும் வார்த்தைகளால் விவரிக்க இயலாத உள்மனக் கலக்கமும் அவரிடம் ஒன்று சேர்ந்து விடுகிறது.

மனிதர்களில் இந்த வகையைச் சார்ந்தவர்கள் அதிகப் பயிற்சி தேவைப்படுகின்ற சில இயற்கைக் காரணங்கள் அவர்களிடம் உண்டாக வில்லை யெனில் சக்தியிழந்து ஆர்வமிழந்து தொய்வுறுகின்ற நிலைக்கு ஆளாகி விடுகின்றனர். அவர்களிடம் குறிப்பாக நெருக்கடியான சந்தர்ப்பங்கள், இடையூற ளிக்கின்ற கவலை தருகின்ற நிலைமைகளில் பொறு மையோடிருக்கச் செய்கின்ற ஈமான் இல்லாததால் தான் அவர்களுக்கு இந்நிலைமை ஏற்படுகின்றது.

நல்லவரும், பாவியும், மூமினானவரும், காபிரான வரும் இவ்விரு வகையினரும் செயற்கையான தைரியத்தைத் தன்னுள் ஏற்படுத்திக் கொள்வதிலும், பீதியுறும் படியான விடயங்களை இலகுவாக்கிக் கொள்கின்ற இயற்கையான அமைப்பிலும் ஒருவருக்கொருவர் சமமானவர்களே. எனினும் மு.்.மினானவர் தன் ஈமானிய பலத்தாலும், பொறுமை, இறைவன் மீதான நம்பிக்கை, அவனையே உறுதிகொள்ளல், அவனிடமே தனக்குரிய நற்கூலியை நாடுதல், ஆகியவற்றால் தன் தைரியத்தை அதிகரித்து, பீதியை தன்னை விட்டும் அகற்றி, கஷ்டங்களை தன்மீது எளிதாக்குகின்ற பல்வேறு விடயங்களால் வேறுபடுகிறார்.

அல்லாஹ் திருமறையில் கூறுகின்றான்: 'நீங்கள் (போரில் காயமடைந்து) துன்பமடைந்திருப்பீர்களானால், நீங்கள் துன்பமடைந்தது போன்று நிச்சயமாக அவர்களும் துன்பம் அடைவர். மேலும் அவர்கள் ஆதரவு வைக்காததை (நற்கூலியை)அல்லாஹ்விடமிருந்து நீங்கள் ஆதரவு வைக்கிறீர்கள்'. (4 : 104)

மேலும் அல்லாஹ்விடமிருந்து உதவியும், குறிப்பான அவனது அருளும், பீதியுறுகின்றவற்றை சிதறடிக்கச் செய்கின்ற அவனது கிருபையும் அவர்களுக்குக் கிடைக்கின்றது.

அல்லாஹ் திருமறையில் கூறுகிறான்: '(துன்பங்களைச் சகித்துக் கொண்டு) நீங்கள் பொறுமையாக இருங்கள். நிச்சயமாக அல்லாஹ் பொறுமையாளர்களுடன் இருக்கின்றான்'. (அன்.்.பால் : 46)

2- சொல், செயல்கள், பலவகை நன்மைகள் மூலம் சிருஷ்டிகளுக்கு உபகாரம் செய்வது கவலை, சஞ்சலம், கலக்கத்தினை போக்கிடும் பல காரணங்களில் இன்னும் ஒன்றாகும். இவையனைத்தும் நலமும், உபகாரமுமாகும். அதன் மூலம் இறைவன் நல்லவராயினும், பாவியாயினும் அந்த நன்மை மற்றும் உபகாரத்தின் தன்மைக்கேற்ப அவர்களது துக்கம், கவலைகளை நீக்குகின்றான். எனினும் மு.்.மினான மனிதருக்குத் தான் அதன் முழுமையான பங்கும், பிரதிபலனும் கிடைக்கிறது. அவரது உபகாரம், இக்லாஸ் எனும் மனத்தூய்மையினாலும், இறைவனிடம் நன்மையை நாடுதலாலும் ஏற்படுவதன் மூலம் மற்றவர்களது உபகாரத்தை விட்டும் வித்தியாசப் படுகிறது. எனவே அவர் நன்மையை ஆதரவு வைப்பதால் நல்லவற்றை செலவு செய்வதை அல்லாஹ் அவருக்கு இலேசாக்குகிறான். மேலும் அவரது மனத்தூய்மை, இறைவனது நன்மையை மட்டுமே நாடுதல் ஆகிய குணங்களின் காரணமாக அவரை விட்டு அவருக்கு ஏற்பட்ட தீங்குகளையும் அகற்றி விடுகின்றான்.

அல்லாஹ் திருமறையில் கூறுகின்றான்: '(நபியே) தர்மத்தையும், நன்மையானவற்றையும், மனிதர்களிடையே சமாதானம் செய்து வைப்பதையும் ஏவியவரைத் தவிர, அவர்களின் இரகசியப் பேச்சில் பெரும்பாலானவற்றில் எந்த விதமான நலமும் இல்லை. ஆகவே எவர் அல்லாஹ்வின் திருப் பொருத்தத்தை நாடி இதைச் செய்கின்றாரோ,

அவருக்கு நாம் மகத்தான நற்கூலியை வழங்குவோம்'. (நிஸாஉ : 114)

மேற்குறிப்பிட்ட இறைவசனத்தில் இத்தகைய காரியங்கள் எவரிடமிருந்து ஏற்படுகிறதோ அத்தனையும் நன்மைதான் என இறைவன் குறிப்பிடுகின்கிறான். நன்மை நன்மையையே கொண்டு வருகிறது. தீமையைத் தவிர்த்து விடுகிறது. மேலும் இறைவனது நன்மையை நாடுகின்ற மு.'.மினான மனிதருக்கு அல்லாஹ் மகத்தான நற்கூலியை வழங்குகின்றான். தொல்லைகள், கஷ்டங்கள், கவலைகள் நீங்குதல் ஆகியவை அம்மகத்தான நற்கூலியிலடங்கும்.

பகுதி

3- பயன்தரும் கல்வியின்பாலோ அல்லது பிற வேலைகளிலோ ஈடுபடுவது, உள்ளத்தைச் சிலகஷ்டங்களில் மூழ்கிடச் செய்து, அதனை தொய்வுறச் செய்திடும் கவலைகளைப் போக்குகின்ற பல காரணங்களில் ஒன்றாகும். ஏனெனில் அவ்வாறு ஈடுபடுவது தனக்கு மனக் கலக்கத்தை ஏற்படுத்திய அந்தக் காரியத்தை விட்டும் தனதுள்ளத்தை மறக்கடித்து விடுகிறது.

மேலும் சிலவேளை அதன் காரணத்தினால் தனக்கு கவலை தரும்படியான அவ்விடயங்களை மறந்து விடவும் செய்கிறான். இதனால் அவனது உள்ளம் சந்தோஷமடைந்து உற்சாகம் அதிகரிக்கிறது. இந்தக் காரணமும் மு.'.மினுக்கும், மு.'.மினல்லாதாருக்கும் இடையில் கூட்டான தாகவே இருக்கிறது. எனினும் மு.'.மினானவர், தான் கற்கின்ற அல்லது

கற்பிக்கின்ற அந்தக் கல்வியின் ஈடுபாட்டில் தனது ஈமான், இக்லாஸ், இறைவனிடம் நன்மையை நாடு தல் ஆகிய தன்மைகளால் முஃமினல்லாதவரை விட வித்தியாசப்படுகின்றார். தான் கற்றவாறு செயல் படவும் செய்கிறார். அவர் செய்யும் அக்காரியம் வண க்கமாக இருந்தால் அது தூய்மையான வணக்கமே. அது லௌகீக வேலையாகவோ அல்லது சம்பிரதாய மாகவோ இருந்து அத்துடன் நல்லெண்ணத்தையும் சேர்த்திருந்து அதன் மூலம் இறைவனுக்கு வழிப் படுதலில் அது தனக்குதவுவதை அவர் நாடியிருந் தால், இதனால் அவரது கவலைகள், சஞ்சலங்கள் நீங்கிட அது உதவுகிறது. கவலை மற்றும் தொந்தர வுகளால் சோதனைக்கு உள்ளாக்கப்பட்ட எத்த னையோ மனிதர்கள் அதனால் பல பிணிகளால் பீடிக்கப்பட்டு, தனக்கு கவலை, சஞ்சலம் தரும் காரணத்தை மறந்து அதை விட முக்கியத்துவமான மற்றொரு வேலையில் ஈடுபடுவதே அவருக்குப் பயன் தரும் மருந்தாக மாறியிருக்கின்றது.

அம்மனிதர் தேர்ந்தெடுக்கின்ற அந்த மற்ற வேலை, அவரது மனம் விரும்புகின்ற, ஆசைப்படுகின்ற ஒன்றாக அது இருப்பது அவசியமாகும். ஏனெனில் இவ்வாறு தேர்ந்தெடுப்பதே பயனுள்ள இந்நன் நோக்கத்தை அடைந்திடுவதற்கு அதிக துணை யாக இருக்கிறது. அல்லாஹ்வே மிக அறிந்தவன்.

4- கவலை மற்றும் துக்கத்தினை அகற்றும் விடயங் களில் மற்றொன்று: தனது சிந்தனையனைத்தையும் அன்றைய தினத்தின் வேலைகளுக்கு முக்கியத்து

வம் தரும் விதத்தில் ஒருங்கிணைப்பதாகும். எதிர் காலங்களிலுள்ள வேலைகளுக்கு முக்கியத்துவம் அளிப்பதைத் விட்டுவிட வேண்டும். மேலும் நடந்து போனவைகளுக்காக கவலைப் படுவதைத் தவிர்க்க வேண்டும். இதனால்தான் நபியவர்கள் 'ஹஸன்', 'ஹம்' எனும் துக்கம் மற்றும் கவலையை விட்டு இறை வனிடம் பாதுகாவல் தேடியிருக்கிறார்கள். 'ஹஸன்' என்பது மீளப் பெறமுடியாத சென்று போன விடயங் களில் கவலை கொள்வதையும், 'ஹம்' என்பது எதிர்காலத்தில் என்ன நடை பெறுமோ என்ற அச்சத்தினால் நிகழும் கவலையையும் குறிக்கும்.

எனவே ஒரு அடியார் அன்றைய தினத்தின் மைந் தராவார். தனது முயற்சி, தெரிந்தெடுத்தல் அனைத் தையும் தமது அன்றைய தினத்தை, தன் நிகழ் காலத்தை சரி செய்வதிலேயே ஒருங்கிணைப்பார். ஏனெனில் அவ்வாறு அவர் நிகழ்காலத்தின் மீது தம் உள்ளத்தை உறுதியாக ஒருங்கிணைப்பது அவருக்குத் தம் பணியில் பூரணத்துவத்தை ஏற்ப டுத்தித் தருகிறது. அதன் மூலமாக அந்த அடியார் துக்கத்தை, கவலை விட்டு ஆறுதல் பெறுவார்.

நபியவர்கள் இறைவனிடம், தான் ஏதேனும் ஒரு பிரார்த்தனை செய்தால் அல்லது தன் உம்மத்தார்க ளுக்கு ஒரு பிரார்த்தனையைப் போதித்தால், அல்லாஹ்விடம் உதவி தேடி, அவனது உபகாரத் தில் ஆசை கொள்வதுடன் தான் எதை அடைய வேண்டிபிரார்த்திக்கின்றானோ, அது நிறைவேறும் விடயத்திலும், எதை நீக்குமாறு வேண்டுகின்றாரோ,

அதை விட்டும் தவிர்ந்திருப்பதிலும் முயற்சிக்குமாறு தூண்டுவார்கள். அத்துடன் எதை நீக்குமாறு கேட்கின்றானோ அதைவிட்டும் அவன் உறுதியாக அகற்றப்பட வேண்டும் என்பதில் முழு முயற்சியோடு பிரார்த்திக்குமாறு கற்றுத்தந்தார்கள். காரணம் பிரார்த்தனை செயலுடன் சேர்ந்ததாகும். எனவே மு.'.மினான அடியார் உலக ரீதியாகவும், மார்க்க ரீதியாகவும் தனக்கு எது பயனளிக்குமோ அவற்றிற்காக அதிக முயற்சி செய்து, தம் இரட்சகனிடம் தனது நோக்கத்தில் வெற்றியினைத் தரும்படி கேட்கிறார். அதற்காக அவனிடம் உதவியும் கோருகிறார்.

நபியவர்கள் கூறுகிறார்கள்: 'உனக்கு பயனளிக்கும் விடயத்தில் ஆசை கொள். அதற்காக அல்லாஹ்விடம் உதவியும் தேடு. இயலாமையாகி விடாதே. உன்னை ஏதேனும் தீமை தீண்டினால் நான் இவ்விதம் செய்திருந்தால் இன்னின்ன பலன் கிடைத்திருக்குமே எனக் கூறாதே! எனினும், இறைவன் எதை விதித்தானோ எதை நாடியிருக்கின்றானோ அதுவே நடந்திருக்கிறது எனக்கூறு! ஏனெனில் இவ்வாறிருந்தால், அவ்வாறிருந்தால் எனக்கூறுவது ஷைத்தானின் செயலுக்கு வழி திறக்கின்றது'. (முஸ்லிம்)

மேற்குறிப்பிட்ட ஹதீஸில் நபியவர்கள், எல்லா சந்தர்ப்பங்களிலும் பயன்தரும் காரியங்களின் மீது ஆசைப்படுவதையும், அதற்காக அல்லாஹ்விடம் உதவி தேடுவதையும், தீங்களிக்கின்ற சோம்பலான இயலாமையைப் பின்பற்றாதிருப்பதையும், முடிந்து போன காரியங்களை ஏற்றுக் கொண்டு அல்லாஹ்

வின் நாட்டமும், விதியும் கண்கூடாக இருப் பதையும் ஒன்று சேர்த்துக் கூறியிருக்கிறார்கள்.

மேலும் காரியங்களை இரு விதமாகப் பிரித்திருக் கிறார்கள்: முதலாவது: ஒரு அடியான் முயற்சியின் மூலம் தமது நோக்கத்தை முழுமையாகவோ அல்லது அதிலிருந்து இயன்றளவேனும் அடைந்து கொள்ள முடியும், அல்லது தம் முயற்சியின் மூலம் (ஒரு தீங்கை) முழுமையாக நீக்கிக் கொள்ளவோ அல்லது அதை இலகுவாக்கிக் கொள்ளவோ முடி யும் என்றிருக்கும் ஒரு வகை. எனவே ஒரு அடியான் இது விடயத்தில் தம் முழு முயற்சியையும் வெளிப் படுத்தித் தன்இரட்சகனிடம் அதற்காக உதவியும் தேடுகின்றான்.

மற்றொன்று: அவ்வாறு முயற்சி செய்திட இயலாத முயற்சிக்கு அப்பாற்பட்டது. இத்தகைய காரியங்க ளில் அந்த அடியான் மன அமைதியுற்று, திருப்தி கொண்டு, அதனை ஏற்றுக் கொள்கின்றான். இந்த அடிப்படையைக் கவனத்தில் கொள்வது கவலை மற்றும் சஞ்சலத்தை போக்கி சந்தோஷத்திற்கு வழிவகுத்திடக் காரணமாகும் என்பதில் எவ்விதச் சந்தேகமுமில்லை.

(பகுதி)

5- அல்லாஹ்வின் திக்ரை அதிகரிப்பது, இதயத்தை விரிவாக்குவதற்கும், மன அமைதியடைவதற்குமுரிய காரணங்களில் முக்கிய காரணமாகும். நெஞ்சத்தை விரிவடையச் செய்வதிலும், அதனை அமைதியுறச்

செய்வதிலும் அவனின் துக்கம், கவலை நீங்கிடச் செய்வதில் திக்ருக்குப் புதுமையான பங்குண்டு.

அல்லாஹ் தன் திருமறையில் கூறுகின்றான்:
'அல்லாஹ்வை நினைவு கூர்வது கொண்டு தான் இதயங்கள் அமைதி பெறுகின்றன என்பதை அறிந்து கொள்வீர்களாக!'... (அர்-ர.்.து : 28)

இந்த நன்நோக்கத்தை அடைந்து கொள்வதில் அல்லாஹ்வின் அழகிய திக்ருக்கு அதன் தனித் துவத்தின் காரணமாகவும், அவனது நற்கூலியை அடியான் ஆதரவு வைப்பதாலும் மகத்தான பிரதிபலன் இருக்கின்றது.

6- வெளிப்படையாகவும்,மறைமுகமாகவும் அல்லாஹ் தமக்களித்திருக்கும் அருட்கொடைகளைப் பற்றிப் பேசுவதும் அவ்வாறே கவலை, துக்கத்தையகற்றி சந்தோஷம் அளிக்கும் காரணங்களில் ஒன்றாகும். ஏனெனில் அந்த அருள் பாக்கியங்களைப் பற்றி அறிவதும், சிந்தித்துணர்வதும் அதைப்பற்றிப் பேசு வதும் அதன் மூலம் அல்லாஹ் கவலை, துக்கங் களை அகற்றி விடுகிறான். மேலும் அதற்காக நன்றி செலுத்துவதன் மீதும் அடியானைத் தூண்டி விடு கின்றது. அவ்வாறு நன்றி செலுத்துதல், அவ்வடியான் ஏழ்மை, நோய் இவை யல்லாத பல்வேறு சோதனை கள் ஆகியவற்றினால் சோதனைக்கு ஆளாக்கப்பட்ட சூழ்நிலையிலும் கூட இறைவனுக்கு நன்றி செலுத் துதல் அந்தஸ்துகளில் மிக உன்னதமானதும், உயர்வுக்குரியதுமானதுமாகும். ஏனெனில் வரைய

றையும், கணக்குமற்ற அல்லாஹ்வின் அருட் கொடைகளையும், தனக்கு ஏற்பட்டிருக்கின்ற ஏதோ சில சிரமங்களையும் ஒப்பு நோக்கினால், சிரமங்க ளுக்கு அல்லாஹ்வின் அருட்கொடைகளின் பால் எவ்வித விகிதாசாரமும் இருப்பதில்லை.

மேலும் கஷ்டங்கள், தீமைகள் மூலம் அல்லாஹ் ஒரு அடியானைச் சோதித்து அந்த அடியானும் அது விஷயத்தில் பொறுமை, இறைவிதியைப் பற்றிய திருப்தி ஆகியவற்றின் மூலம் தன் கடமையை நிறைவேற்றினால் அதன்படி இலகுவாவதுடன் அதன் சிரமமும் இலேசாகிறது. பொறுமை, திருப்தி ஆகிய கடமைகளை நிலை நிறுத்துவதனால் அல்லாஹ்விற்கு அடிபணிதல், அவனது நற்கூலியை ஆதரவு வைத்தல் ஆகியவற்றிற்காக அவ்வடியானின் சிந்தனை கசப்பான பல விடயங்களை சுவையான தாக ஆக்கி விடுகிறது. அதற்காக அவன் பெறும் நற்கூலியின் இனிமை அவனது பொறுமையின் கசப்பினை மறக்கச் செய்து விடுகிறது.

7- இவ்விடத்தில் பெருமானாரின் ஒரு ஸஹீஹான ஹதீஸில் சுட்டிக்காட்டியிருக்கும் நடைமுறையைப் பயன்படுத்துவது அதிகப் பயன் மிகுந்ததாகும்.

பெருமானார் (ஸல்) அவர்கள் கூறுகின்றார்கள்:

'உங்களை விட கீழ்நிலையில் இருப்பவரை பாருங் கள். உங்களை விட மேல் நிலையில் இருப்பவர்க ளைப் பார்க்காதீர்கள். ஏனெனில் அதுதான் அல்லாஹ் உங்களுக்குக் கொடுத்த அருட்கொடைகளை

நீங்கள் குறைத்து மதிப்பிடாமலிருப்பதற்கு மிகத் தகுதியானதாகும்'. (புகாரி, முஸ்லிம்)

எனவே அடியான் பெருமானாரின் உயர்ந்த இக் குறிப்பினை ஊன்றிக் கவனித்தால் தனக்குக் கிடைத் திருக்கும் சுகத்திலும் அது தொடர்பானவற்றிலும், அந்நிலையில் தான் அடைந்திருக்கும் ரிஸ்க்கிலும் அது தொடர்பான மற்றவற்றிலும் படைப்புகளில் மிக அதிகமானவர்களைக் காட்டிலும் தன்னை மேம் பட்டவராகக் காண்பான். இந்நிலையில் கவலையும், கலக்கமும் அவரை விட்டு நீங்கி, எந்தெந்த நி.ஃ.மத் துக்களில் தனக்குக் கீழ்நிலையிலிருப்பவரைப் பார்க்கிலும் அவர் மேம்பட்டிருக்கின்றாரோ அந்த நி.ஃ.மத்துகளின் மூலம் அவரது மகிழ்ச்சி நிலை யும், சந்தோஷமும் அதிகரிக்கிறது.

உலக ரீதியிலும், மார்க்க ரீதியிலும், வெளிப் படையாகவும், மறைமுகமாகவும் அல்லாஹ் தனக்க ளித்துள்ள பெரும் நி.ஃ.மத்துகளைப் பற்றி அடியா னின் சிந்தனை நீளும்போது, தனது இரட்சகன் தனக்கு அதிகமான நன்மைகளையும் அருட்கொடை களையும் அளித்திருப்பதையும், பலவித தீமைகளை தன்னை விட்டு அகற்றி இருப்பதையும் அறிகிறான். இந்நிலை அவனது கவலைகளையும் சங்கடங்க ளையும் போக்கி மகிழ்வையும், உவகையையும் பெருமளவில் மன நிம்மதியையும் ஏற்படுத்து கின்றது என்பதில் எவ்விதச் சந்தேகமுமில்லை.

பகுதி

8- துக்கம், மற்றும் மனக் கவலைகள் நீங்கி, சந்தோஷம் ஏற்படுத்தும் காரணங்களில் ஒன்று: கவலைகளை ஏற்படுத்துகின்ற காரணங்களை அகற்றுவதிலும், சந்தோஷத்தை வருவிக்கும் காரணங்களை ஏற்படுத்திக் கொள்வதிலும் முயற்சி செய்வதாகும். மேலும் அது தன்னால் மீட்ட முடியாத சென்று போன துக்கங்களை மறப்பதன் மூலமும், அது விடயத்தில் தம் சிந்தனையை ஈடுபடுத்துவது நடைமுறைச் சாத்தியமில்லாத, வீணான காரியம் என்றும், மேலும் அது அறியாமையும் பைத்தியக்காரத் தனமும் என விளங்குவது மூலமுமேயாகும். எனவே அவை பற்றிய சிந்தனையை விட்டு அடியான் தன்மனதை மாற்ற முயல வேண்டும். அவ்வாறே வறுமை, பயம் அல்லது எதிர்காலத்தில் தான் பீதியுடன் கற்பனை செய்கின்ற இவையல்லாத வேறு துன்பங்கள் இவைகளைப் பற்றிய கலக்கத்தை விட்டும் மனதை மாற்ற முயல வேண்டும்.

இதனால் எத்திர்காலங்களில் தனக்கேற்படும் நன்மைதீமைகள், ஆசைகள், துயரங்கள் யாவுமே அறியப்படாததாகும் என்பதையும், எவ்விடயத்திலும் அதில் நன்மைகளை ஏற்படுத்திக் கொள்வதற்கும், அவற்றில் தீமைகளைத் தவிர்த்துக் கொள்வதற்கும் முயற்சி செய்வதைத் தவிர அடியார்களின் கரத்தில் வேறெந்த சக்தியுமில்லை. அது பெரும் மதிநுட்பமும் மகத்துவமும் மிக்க இறைவனின் கரத்திலேயே உள்ளது என்றும் அவன் அறிந்து கொள்கின்றான்.

ஒரு அடியான் எதிர்கால நிலைகள் பற்றிய கவலை களை விட்டு தம்சிந்தனையைத் திருப்பி அவற்றை சரிசெய்வதில் இறைவன் மீது நம்பிக்கை கொண்டு அவ்விடயத்தில் அவன் பக்கமே நிம்மதிகொள்வா னேயானால், அவ்வாறு செய்யும்போது அவனது உள்ளம் அமைதியடைவதுடன் அவனது நிலைமை களும் சரியாகிறது. அவ்வாறே அவனுக் கேற் பட்ட கவலைகளும், கலக்கங்களும் அவனை விட்டு தானாகவே அகன்றுவிடுகிறது.

9- எதிர்கால விடயங்களைப் பற்றி பெருமானார் அவர்கள் பிரார்த்தித்து வந்த கீழ்க்காணும் துஆவின் மூலம் அதற்காகப் பிரார்த்தனை செய்வது இனிவரும் காரியங்களைக் கவனத்தில் கொள்வதில் அதிகப் பயன் தருவதாகும்.

பெருமானார் (ஸல்) பிரார்த்தித்த அந்த துஆ :
'அல்லாஹும்ம அஸ்லிஹ் லீ தீனீ அல்லதீ ஹுவ இஸ்மது அம்ரீ, வஅஸ்லிஹ் லீ துன்யாய அல்லத்தீ ஃபீஹா மஆஷீ, வ அஸ்லிஹ் லீ ஆகிரத்தீ அல் லத்தீ இலைஹா மஆதீ, வஜ்அலில் ஹயாத்த ஸியாதத்தன் லீ ஃபீ குல்லி கைரின், வல்-மவ்த்த ராஹத்தன் லீ மின்குல்லி ஷர்ரின்'. (முஸ்லிம்)

பொருள்: 'இறைவா! எனது காரியங்களின் பாதுகாப் பாக இருக்கும் என் மார்க்க விடயங்களை எனக்கு சரி யானதாக்கித் தருவாயாக! எனது வாழ்க்கை எதிலே இருக்கிறதோ அந்த இம்மை வாழ்வையும் சரியானதாக்கித் தருவாயாக! மேலும் எனது மீளு மிடமிருக்கும் மறுமை வாழ்வையும் சரிப்படுத்து

வாயாக! நன்மையான அனைத்து விடயங்களிலும் எனது வாழ்வை அதிகமாக்குவாயாக! மரணத்தை, தீமையான ஒவ்வொரு காரியத்தை விட்டும் சுகம் அளிப்பதாக ஆக்கியருள்வாயாக!'

'அல்லாஹும்ம ரஹ்மத்தக்க அர்ஜு, ஃபலா தகில்னீ இலா நஃப்ஸீ தர்ஃபத்த அய்னின், வஅஸ்லிஹ் லீ ஷஃனீ குல்லஹு, லாஇலாஹ இல்லா அன்த்த'. (அபூதாவூத்)

பொருள்: 'இறைவா! உன் பேரருளையே நான் ஆதரவு வைக்கின்றேன். எனவே கண் இமைக்கும் நேர மேனும் என் ஆத்மாவின் பக்கம் ந என்னை பொறுப் பாக்கி விடாதே! என் விடயங்கள் அனைத்தையும் எனக்கு நீ சரிப்படுத்தித் தருவாயாக! உன்னைத் தவிர வணக்கத்திற்குரிய வேறு நாயன் இல்லை'.

எனவே அடியார் தனது இம்மை, மறுமை நன்மை களுக்கான மேற்குறிப்பிட்ட இந்த துஆக்க ளை உண்மையான எண்ணத்துடனும், உள ஒருமை யோடும் தாம் உறுதி கொண்டிருக்கும் காரியத்தில் நல்ல முயற்சியும் செய்தவராக இறைவனிடம் பிரார்த்தனை செய்து வந்தால், எதனை ஆதரவு வைத்து, எதற்காக அவர் துஆவும் செய்து, செயல்பட்டும் வந்தாரோ அதனை அல்லாஹ் அவருக்கு உரித்தாக்கி வைக்கின்றான். அவரது கவலையை மறக்கடித்து சந்தோஷமும், உவகையுமுள்ளதாக மாற்றி விடுகின்றான்.

பகுதி

10- ஒரு அடியான் தனக்கு துன்பங்கள் ஏற்பட்டால் தன்சக்திக்கு உட்பட்டவாறு அத்தீமைகளின் மிக மோசமான ஒரு கட்டத்தைத் தானாகக் கற்பனை செய்வதன் மூலம் அவற்றை இலேசாக்கிக் கொள்வ தற்காக முயற்சி செய்வதும், அதற்கு தம் ஆத்மா வை தயார் செய்வதும் கவலை, துக்கங்களைப் போக்கிடும் காரணங்களில் அதிகப் பயன் மிகுந்த தாகும். எனவே அவ்விதம் செய்தால் தம்மால் எந் தளவு அதனை இலகுவாக்கிக் கொள்ள இயலுமோ அந்த அளவு முயற்சிக் கட்டும். இவ்வாறு மனதை அதற்காக தயார் படுத்துவதன் மூலமும், பலனுள்ள இத்தகைய முயற்சியின் மூலமும் அவன் கவலை, துக்கம் நீங்கி விடுகின்றது. அதற்குப் பதிலாக அவ் வடியானுக்கு பலன் நிறைந்தவைகளைக் கொண்டு வருவதிலும், கஷ்டங்களைத் தவிர்ப்பதிலுமான முயற்சியாகவும் அது ஆகி விடுகின்றது.

ஒரு அடியா'னுக்கு பயம், நோய்கள், ஏழ்மை, தான் விரும்பிய பல வகையான விருப்பங்கள் கிடைக் காமல் போகுதல் ஆகிய ஏதேனுமொரு துன்பம் ஏற்பட்டுவிட்டால், உடனே அவர் அதனை ஏற்றுக் கொள்வதற்கு தம் மனதைத் தயார் செய்வதன் மூலமும், அமைதியைக் கடைப்பிடிப்பதன் மூலமும் அத்துன்பத்தினை எதிர் கொள்ளட்டும்! எனினும் அது இயன்ற அளவு அதிகமாக இருக்கட்டும்! ஏனெனில் துயரங்களைத் தாங்குவதற்கு மனதைத் தயார் செய்வது, அதனை இலகுவாக்கி, அதன் கடு

மையை நீக்குகின்றது. குறிப்பாக தம்மால் முடிந்த மட்டும் அதனைத் தவிர்ப்பதற்காக தம் மனதை அவர் ஈடுபடுத்தும்போது, உடனே இயல்பாகவே துயரங்களுக்கு முக்கியத்துவமளிப்பதை விட்டும் அவரை திசை திருப்புகின்ற பலன் தரும் முயற்சி யுடன் மனதைத் தயார் செய்வதும் ஒன்று சேர்ந்து விடுகின்றது. மேலும் அவ்வடியான் தனக்கு ஏற்ப டும் துயரங்களை எதிர்கொள்ளும் தன் பலத்தைப் புதுப்பித்துக் கொள்வதற்கு அல்லாஹ்வின் மீதே நம்பிக்கையும், அழகிய உறுதியும் கொள்வதுடன் தன் ஆத்மாவுடன் போராட்டமும் செய்கின்றான். அடியான் மேலெண்ணம் வைக்கும் இம்மை, மறுமை நற்பயன்களுடன், இதய சாந்தி, உவகை உண்டா குவதில் மகத்தன பயன்கள் இவ்விடயங்களுக்கு உண்டு என்பதில் எவ்விதச் சந்தேகமுமில்லை. இது அனுபவ ரீதியாகக் கண்ணால் கண்டதாகும். இதனை அனுபரீதியில் கண்டவர்களின் நிகழ்வு களும் பல உள்ளன.

பகுதி

11- பலமான உள்ளம், அது திகைத்து விடாமலும், தீய சிந்தனைகள் ஏற்படுத்துகின்ற கற்பனைகள், சந் தேகங்களில் உணர்ச்சி வசப்படாமலும் இருப்பது ஆகியவை, நரம்பு சம்பந்தமான உளநோய்களுக்கு மட்டுமன்றி உடல் நோய்களுக்கும் சிறந்த சிகிச் சையாகும். ஏனெனில் ஒருவன் எப்போது வீண் கற்ப னைகளுக்கு இடமளித்து, நோய்களால் அஞ்சுதல், கோபம், நோவினை தரும் காரணங்கள் மூலமான இடையூறுகள், அவன் விரும்பியவைகள் இல்லாம

லாகுதல், துன்பம் தருவனவற்றில் வீழுதல் ஆகிய மனிதனின் நிலைகலை மாற்றும் விடயங்களினால் உணர்ச்சி வசப்பட்டு அவற்றிற்கு இலக்காகி விடு கின்றானோ, அம்னிதனை அது கவலையிலும், சஞ்ச லத்திலும் உடல்ரீதியான, மணரீதியான நோய்களி லும், மக்கள் அதிகமதிகம் கண்கூடாக அதன் தீய விழைவுகளைக் கண்டு கொண்டிருக்கின்ற நரம்புத் தளர்ச்சி போன்றவைகளிலும் வீழ்த்தி விடுகின்றது.

12- எப்போது ஒருவரின் உள்ளம் அல்லாஹ்வை மட்டும் நம்பி, அவன் மீதே நம்பிக்கை கொண்டதா கவும், தேவையற்ற சந்தேகங்களுக்குக் கட்டுப்படா மலும், தீய சிந்தனைகளுக்கு ஆட்படாததாகவும், அல்லாஹ்வை உறுதி கொண்டு, அவனது உபகா ரங்கள் மீது ஆசை கொண்டதாகவும் இருக்கின்ற தோ, அப்போது அவனை விட்டும் கவலை, சஞ்ச லங்கள் அகன்று விடுகின் றது. மேலும் உள ரீதி யான, உடல்ரீதியான நோய்களில் அதிகமானவை நீங்கி, அவனுள்ளத்திற்கு வார்த்தைகளால் விவரிக்க முடியாத விரிவும், உவகையும் உண்டாகின்றது.

தீய கற்பனைகளுக்கும், தேவையற்ற சந்தேகங் களுக்கும் ஆளான நோயாளிகளால் மருத்துவ மனைகள் நிரம்பியிருக்கின்றன. மேற்குறிப்பிட்ட இந்த விடயங்கள், பலவீனர்கள் ஒரு புறமிருக்க அதிக மான பலசாலிகளின் உள்ளங்களில் கூட எவ்வளவோ தூரம் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கின் றது. மேலும் பல உள்ளங்கள் பைத்தியத்திற்கும், மடமைக்கும் ஆட்பட்டிருக்கின்றது! அல்லாஹ்,

எவருக்கு மனக் கலக்கத்தை நீக்கி, உள்ளத்தை உறுதிப் படுத்து கின்ற பயன்மிகு காரணங்களை ஏற்படுத்திக் கொள்வதற்காக தன் ஆத்மாவோடு போராடுவதற்கு நல்லுதவி செய்து அவருக்கு சுகம ளித்தானோ அத்தகையவர்களே இவற்றிலிருந்து சுகம் பெற்றவர்களாவர்.

அல்லாஹ் திருமறையில் கூறுகின்றான்: 'எவர் அல்லாஹ்வின் மீது (தன் காரியத்தை ஒப்படைத்து முழுமையாக) நம்பிக்கை வைக்கிறாரோ அவருக்கு அவனே ((முற்றிலும்) போதுமானவன்'. (தலாக் : 3)

அதாவது அவரது உலக மற்றும் மார்க்கக் ரீதி யான காரியங்களில் முக்கியமான அனைத்துக்கும் அல்லாஹ்வின் நல்லுதவியே போதுமானதாகும். ஏனெனில் கருணையாளனான அல்லாஹ்வின் மீது முழுமையான நம்பிக்கை கொண்டவர் பலமுள்ள உள்ளம் கொண்டவராகிறார். அவ்வுள்ளத்தில் அடிக் கடி எழுகின்ற சந்தேகங்கள் எந்த விளைவையும் ஏற்படுத்திட முடியாது. அசம்பாவி தங்கள் அவரை திடுக்கிடச் செய்யாது. காரணம் அவ்வாறு திடுக்கத் திற்கு ஆட்படுவதுதான் ஆன்மாவின் பலவீனத்தாலும், அடிப்படையற்ற பயத்தினாலும் ஏற்படுகின்றது என்பதை அவர் அறிந்து வைப்பதாகும். காரணம் அல்லாஹ் எல்லாக் காரியத்திற்கும் தன்மீது முழு மையாக நம்பிக்கை வைத்தவர்களுக்கு பரிபூர்ண மான முறையில் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கின் றான் என்பதையும் அவர் தெளிவாக விளங்கியி ருக்கின்றார். எனவே அல்லாஹ்வையே உறுதியாக

நம்பி, அவனது வாக்குறுதியின்மீது அமைதி பெறு கின்றார். இதனால் அவரது கவலையும், கலக்கமும் நீங்கி, அவரது சிரமம் இலேசாகவும், அவரது கவலை மகிழ்ச்சியாகவும், அவரது பயம் பாது காப்பாகவும் மாறிவிடுகின்றது.

நாம் நம் அனைவருக்கும் நற்சுகம் அளிக்குமா றும், பலமான உள்ளத்தை தருவதன் மூலமும், அனைத்து விதத்தீமைகளையும் அகற்றி, எல்லா விதமான நன்மைகளையும் தருவதற்கு அல்லாஹ் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கின்றானே அத்தகைய பரிபூரணமான முழு இறைநம்பிக்கையினால் அந்த உள்ளத்தை உறுதியாக்கி வைப்பதன் மூலமும் நமக்கு சிறப்பளிக்குமாறும் கண்ணியமிக்க அல்லாஹ்விடம் பிரார்த்திக்கின்றோம்.

பகுதி

13- 'எந்தவொரு மூமினும், ஒரு மூமினான பெண்ணை வெறுக்க வேண்டாம்! அவளிடமுள்ள ஒரு குணத்தை அவர் வெறுத்தால், அவளிடமுள்ள மற்றொரு குணத் தின் மூலம் அவர் திருப்தியடைவார்'. (முஸ்லிம்)

பெருமானார் (ஸல்) அவர்களின் இந்த ஹதீஸில் மகத்தான இரு நற்பயன்கள் இருக்கின்றன:

அதில் ஒன்று:
மனைவிமக்கள், உற்றார் உறவினர்கள், நண்பர், கொடுக்கல்-வாங்கல் செய்வோர், மற்றும் உனக்கும்,

யாருடன் தொடர்பும், சம்பந்தமும் இருக்கின்றதோ அத்தகைய ஒவ்வொருவருக்கும் மத்தியில் ஆகிய வாழ்வின் சகலவித தொடர்பிற்கும் இந்த பெருமானாரின் மகத்தான ஹதீஸ் நல்வழிகாட்டுகிறது.

அதாவது குற்றம், குறைகள், அல்லது நீ மனதால் வெறுக்கின்ற ஏதேனுமொரு விடயம் அவரிடத்தில் இருக்கத்தான் செய்யும் என்பதனை உன் மனதில் தீர்மானிப்பது அவசியமாகும். அவ்வாறு ஏதேனும் ஒன்றை நீ காண நேர்ந்தால், உடனே அதற்கும், அவரிடத்தில் நீ காண்கின்ற நற்குணங்கள் மற்றும் பொதுவான, தனியான நல்ல நோக்கங்கள் ஆகியவற்றையும் நினைவு கூர்ந்து அந்த மனிதருடனான பலமான தொடர்பு, பிரியத்தை நிலைபெறச் செய்தல் ஆகியவற்றில உனக்கு எது அவசியமோ அதனையும் ஒப்பு நோக்கிப்பார். இவ்வாறு அத்தீமைகளைக் கவனிக்காது நன்மைகளை நோக்குவதன் மூலம் நட்பும், தொடர்பும் நீடித்து மனம் நிம்மதியடைந்து அவ்வாறே அது உனக்கும் உண்டாகின்றது.

இரண்டாவது நற்பயன்:

கவலை, கலக்கம் நீங்கி, தெளிவு ஏற்படுவதும், கடமையான மற்றும் விரும்பத்தக்க உரிமைகளை தொடர்ந்து நிலைபெறச் செய்வதும், இரு தரப்பாருக்குமிடையில் சுகம் ஏற்படச் செய்தலுமாகும்.

எவர் பெருமானார் (ஸல்) அவர்களின் இந்த வழி காட்டுதலைக் கடைப் பிடிக்காமல், அதற்கு மாற்றமாக தீமைகளை மட்டும் கவனத்திற் கொண்டு,

நற்குணங்களைப் பார்ப்பதை விட்டும் குருடனாக இருக்கின்றாரோ அவர் அவசியம் கலக்கமடையத் தான் செய்வார். அவருக்கும் நேசத்துடன் அவரோடு தொடர்புள்ளோருக்கும் இடையில் கட்டாயம் சங்கடம் ஏற்படத்தான் செய்யும். இருவருக்கும் இடையில் பேணப்பட வேண்டிய அதிகமான உரிமைகளும் துண்டிக்கப்பட்டு விடும்.

உயரிய மனோநிலைகளைக் கொண்ட அதிகமான மக்கள் தீங்குகளும், இடர்களும் ஏற்படுமிடத்து பொறுமையின் மீதும், அமைதியின் மீதும் தங்கள் மனதை நிலைபெறச் செய்கின்றார்கள். எனினும் மிகச்சிறிய தொந்தரவுகளின் போது கலக்கமுற்று விடுகின்றார்கள். அவர்களது மதிநுட்பமும் மழுங்கி விடுகின்றது. அவர்கள் மிகப் பெரிய துன்பங்களின் போது, அவற்றை ஏற்றுக் கொள்ளத் தங்கள் மனதைத் தயாராக்கினாலும், மிகச் சிறிய விடயங்களின் போது இதனை மறந்து விடுவதுதான் இதற்குக் காரணமாகும். எனவே இது அவர்களுக்கு தீங்களிப்பதுடன் அவர்களது சுகத்திலும் பாரதூரமான விளைவை ஏற்படுத்தி விடுகின்றது.

எனவே உறுதியான சிந்தனையுடைய மனிதர் மிகச் சிறிய விடயங்களானாலும் அல்லது பெரிய விடயங்களானாலும் அவற்றிற்கு முகம் கொடுப்பதற்காகத் தன் மனதைத் தயார் நிலையில் வைத்திருப்பார். அவை சீராக நிறைவேற அல்லாஹ்விடம் உதவியும் வேண்டி நிற்பார். கணப் பொழுதும் கூட தன்னை தன் ஆத்மாவின் பக்கம் சாட்டி விடாமலிருக்கும்

படியும் வேண்டி நிற்பார். இந்நேரத்தில் பிரமாண்டமான விடயங்கள் அனைத்தும் அவருக்கு இலகுவானதாகி விடுவது போன்றே சிறிய விடயங்களும் அவருக்கு இலேசாகி விடு கின்றது. அதனால் உளஅமைதியும், சரீர சுகமும், மன நிம்மதியும் உடையவராக சிறப் புற அவர் தம் வாழ்வை இனிதே கழிக்கின்றார்.

பகுதி

14- அறிவார்ந்த மனிதர் சிறந்த தமது வாழ்வு, சுபிட் சமும், அமைதியும் உள்ள வாழ்க்கை என்பதையும், மேலும் அது மிக மிகக் குறைவானது என்பதையும் விளங்கியிருக்கின்றார். எனவே தொடர்ந்த சங்கடங் களினாலும், கவலையினாலும் அதைக் குறைத்துக் கொள்வது அவருக்கு அவசி யமற்ற ஒன்றாகும். ஏனெனில் அவ்வாறு செய்வது சரியான வாழ்விற்கு முற்றிலும் மாறுபட்டதாகும். எனவே அவர் தம் வாழ்வின் பெரும்பகுதி நேரங்களை கவலைகளுக் கும், சங்கடங்களுக் கும் இரையாகிப் போவதைத் தன் வாழ்விற்குக் கொடுக்காமலிருப்பார்.

எனினும் முஃமினான மனிதருக்கு இத்தன்மை கைகூடுவதில் மிகச் சிறந்த பங்கும், இம்மை, மறுமைக்கு பலன்தரும் பகுதியும் உண்டு.

15- மேலும் தனக்கு ஏதேனுமொரு துன்பம் நிகழ்ந்து விட்டாலோ அல்லது ஏதேனுமொன்றினைப் பயந்தா லோ அவர், மார்க்கரீதியாக, அல்லது உலக ரீதி யாக தனக்குக் கிடைத்திருக்கும் ஏனைய அருட்கொ

டைகளையும் தனக் கேற்பட்ட துயரத்தையும் ஒப் பிட்டு நோக்குவது அவசியமாகும். ஏனெனில் அவ் வாறு ஒப்பிட்டு நோக்குமிடத்து தனக்கு எவ்வளவு அதிகமான அருட் கொடைகள் வழங்கப் பட்டிருக் கிறது என்பதும், தனக்கேற் பட்ட சில துயரங்கள் துச்சமாயிருப்பதும் அவருக்கு தெளிவாகும்.

அவ்வாறே தனக்கு ஏதேனுமொரு தீங்கு ஏற்பட்டு விடும் என்ற பயத்திற்கும், அதிலிருந்து நிம்மதி பெறுவதற்குமுரிய அதிகமான வாய்ப்புக்களை யூகித்துப் பார்ப்பதற்கும் மத்தியில் அவர் சற்று ஒப்பு நோக்குதல் அவசியமாகும். அத்துடன் பலவீ னமான ஒரு வாய்ப்பு பலமான அதிக வாய்ப்புகளை மிகைத்திட இடமளிக்காமலுமி ருப்பார். அதனால் அவனது கவலையும், பயமும் நீங்கி விடுகின்றது. தன்னைப் பீடிக்க இட மிருக்கும் அதிகமான யூகங்களைக் கற்பனை செய்து அவைகள் நிகழு மிடத்து அவற்றிற்கு உறுதியாக முகங்கொடுக்க தன் ஆன்மாவைத் தயார் செய்து கொள்வார். அந்தத் துயரங்களில் நிகழாதவற்றை தவிர்த்துக் கொள்வதற்கும், அவ்வாறு நிகழ்ந்து விடின் அவற் றை அகற்றுவதற்கும் அல்லது அதன் சிரமத்தை இலகுவாக்கு வதற்கும் அவர் தன்னாலான முயற் சியிலும் ஈடுபடுகின்றார்.

16- பயன் தரும் காரியங்கள் சில:

பிற மனிதர் மூலமாக உமக்கேற்படும் நோவினை கள் குறிப்பாக தீய சொற்கள் உமக்கு எவ்விதத்

தீங்குமளிக்காது. மாறாக அவர்களுக்கே அது தீங்கு விளைவிக்கும் என்பதை நீ அறிந்து கொள்ள வேண்டும். எனினும் அதற்கு அதி முக்கியமளிப் பதில் நீ ஈடுபட்டு, அவைகள் உன் உணர்வுகளை சொந்தமாக்கிக் கொள்வதற்கு நீ இடமளித்து விட்டால், அந்நேரம் அது அவர்களுக்கு தீங்களிப்பது போன்று உனக்கும் அது தீங்களிப்ப தாக அமைந்து விடும். எனவே நீ அதனை ஒரு பொருட்டாகவே கருதவில்லையெனில் அதனால் உமக்குத் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய எந்த விதமான துயரமோ பாதகமோ ஏற்படுவதில்லை.

17- மேலும் உமது வாழ்வு உம் சிந்தனையைத் தொடர்ந்தே செல்கின்றது என்பதை நீ அறிந்து கொள். எனவே சிந்தனைகள் தீன், துன்யாவிற்கான பலன்களைத் தழுவியதாக இருந்தால் அதனால் உமது வாழ்வு அழகும், சுபிட்சமும் நிறைந்ததாக ஆகிவிடும். அவ்வாறில்லையெனில் வாழ்வு அதற்கு மாற்றமானதாகவே அமைந்து விடும்.

18- கவலையை விரட்டியடிப்பதற்கு அதிகப் பலன் தரும் விடயங்களிற் சில:

ஒவ்வொரு காரியத்திற்கும் நன்றி பாராட்டுதலை இறைவனிடமிருந்தேயன்றி பிற மனிதரிடம் தேடாமலி ருக்க உமது மனதினைத் தயார் செய்வது, கவலையை விரட்டியடிப்பதில் பெரும்பலன் நல்கும் விடயமாகும். எனவே யாருக்கு நீ கடமைப்பட்டிருக்கின் றாயோ அவருக்கோ, அவரல்லாத மற்றவர்களுக்கோ

நீஏதேனும் உபகாரம் செய்தால், உன்னிடமிருந்து ஏற்படும் இந்தச் செயல் அல்லாஹ்வோடு நீ செய்யும் கொடுக்கல்-வாங்கலாகும் என்பதை நீ அறிந்து கொள்ள வேண்டும். எவருக்கு உபகாரம் செய்தாயோ அதற்காக அவரிடமிருந்துள்ள நன்றி பாராட்டுதலை நீ ஒரு போதும் பொருட்படுத்தவே கூடாது.

அல்லாஹ் தன் படைப்புக்களில் உன்னதமான தம் அடியார்களைப் பற்றிக் கூறும் போது திருக்குர்ஆனில் இவ்வாறு கூறுகின்றான்:

உங்களுக்கு நாம் உணவளிப்பதெல்லாம் இறைவனின் திருமுகத்திற்காகவே தான். உங்களிடமிருந்து பிரதிபலனையோ, (அல்லது நீங்கள்) நன்றி செலுத்த வேண்டும் என்பதையோ நாங்கள் நாடவில்லை (என அவர்கள் கூறுவர்)'.(அல்-இன்ஸான்: 9)

குடும்பம், பிள்ளைகள் இன்னும் பலமான தொடர்புகள் வைத்துள்ளவர்களுடன் நடந்து கொள்வதில் இது இன்னும் கட்டாயமாகின்றது. அவர்களை விட்டும் தீங்கினைத் தவிர்ப்பதற்கு உன் மனதில் எப்போது நீ உறுதியான தீர்மானம் செய்கின்றாயோ, அப்போது உறுதியாக நீயும் சுகம் நாடி, அவர்களுக்கும் நற்சுகம் தந்தவனாகி விட்டாய்.

சுகத்தைக் கொண்டு வந்து சேர்த்திடும் விடயங்கள் மேலும் சில:

சிறந்தவைகளை எடுத்துக் கொள்வது. மனவெ ழுச்சிக்குத் தக்கவாறு அதற்காகச் செயல்படுவது: அது விடயத்தில் தோல்வியுற்று உன்னை கலக்கத் தில் ஆழ்த்தக் கூடிய விதத்தில் அதிக சிரமத்தை மேற்கொள்ளாமலிருத்தல்: அவ்வாறு சிரமப் படுமி டத்து அந்த சிறப்பம்சத்தை அடைவதை விட்டும் தோல்வியுற்று நீ சென்ற வழிகளிலேயே மீளுவாய். மேலும் இதுவே சாலச் சிறந்த வழியாகும். மேலும் தெளிவற்றவற்றை விடுத்து தெளிவான இன்பமான வற்றை கடைப்பிடிக்க வேண்டும். இதன் மூலமாக உன் துயரச் சுமைகள் நீங்கி, வாழ்வின் இன்பச் சுவை அதிகரிக்கின்றது.

19- பெரும்பயன் நல்கும் காரியங்களைக் கவனத் தில் வைத்துக்கொள். அதனை உனக்கு உரித் தாக்கிக் கொள்வதற்காக செயல்படு. கவலையை இழுத்துக்கொண்டு வந்து சேர்க்கும் காரணங்களில் உன்னை உழலச் செய்யும் தீமையான காரியங்க ளின்பால் நீ திரும்பிப் பார்க்க வேண்டாம். மேலும் சுகத்தின் மூலமாக வும், முக்கியத்துவம் மிகுந்த செயல்களின் மீது மனதினை ஒருமிக்கச் செய்வதன் மூலமாகவும் உதவி தேடிக்கொள்.

20- பயன் தரும் விடயங்களில் மேலும் சில:

வேலைகளை உடனுக்குடன் முடித்து, வரவிருக் கும் வேலைகளுக்காக ஓதுங்கியிருத்தல்: ஏனெனில் வேலைகளை உடனுக்குடன் முடிக்காத பட்சத்தில் முந்தைய வேலைகள் ஒன்று சேர்ந்து இனிவரக் கூடிய வேலைகளும் அத்துடன் சேர்ந்து பழுவாகி

விடுகின்றது. எனவே அந்தந்த நேரத்திலேயே அவை அனைத்தையும் நீ நிறை வேற்றி, பலமான சிந்தனையுடனும், சக்தி மிகுந்த செயல்திறனுடனும் எதிர் வரவிருக்கும் காரியங்களில் கவனம் செலுத் துவது இலகுவாகும்.

21- அதிக பயன் நல்கிடும் செயல்களில் அதி முக் கியத்துவம் வாய்ந்ததை நீ தெரிவு செய்ய வேண் டும்: உன் மனம் எதன் மீது சாய்கின்றதோ, எதன் மீது தீவிர ஆசை கொண்டிருக்கின்றதோ அவைக ளுக் கிடையில் நீ பாகுபடுத்தி தெரிவு செய்து கொள். ஏனெனில் அதற்கு மாற்றமாக நீ தேர்ந்தெ டுத்து செயல்படுவது விருப்பமின்மையையும், சோர் வையும், தீமையையும் ஏற்படுத்தி விடும். மேலும் அவ்வாறு நீ தேர்ந்தெடுத்துக் கொண்ட அதி முக் கியத்துவம் வாய்ந்த அச்செயலின் மீது சரியான சிந்தனையின் மூலமும், சிறந்த ஆலோசனைகளின் மூலமும் உதவி தேடிக்கொள். ஏனெனில் எவர் பிறரி டம் ஆலோசனை செய்கின்றாரோ அவர் ஒருபோதும் கைசேதமடைய மாட்டார். மேலும் எதை நீ செயல்படுத்த நாடுகின்றாயோ அதனை தெளிவாகத் திட்டமிட்டுக் கொள். அது நன்மையளிப்பது தான் என நீ தெளிவு பெற்றுக் கொண்டால், அதில் உறுதி கொண்டு, உடன் அல்லாஹ்வின் மீதே முழு நம்பிக்கை கொள். நிச்சயமாக அல்லாஹ் தன் மீது முழுமையான நம்பிக்கை வைத்திருப் போரை நேசிக்கின்றான்.

சர்வபுகழும் அகிலத்தார் அனைவரையும் இரட்சித்துக் காக்கின்ற அல்லாஹ்விற்கே உரித்தானது. அல்லாஹ்வின் ஸலவாத்தும், ஸலாமும் நமது தலைவர் முஹம்மது (ஸல்) அவர்கள் மீதும், அவர்களது குடும்பத்தினர், தோழர்கள் மீதும் உண்டாகட்டுமாக!

# பொருளடக்கம்


நூலாசிரியரைப்பற்றி .......3

ஆசிரியர் முன்னுரை ......7

1- இறைநம்பிக்கையும், நல்லமல்களும் ......9

2- சொல், செயல், போன்ற நன்மைகளால் படைப்பினங்களுக்கு உபகாரம் செய்தல் .....17

3- ஏதேனுமொரு செயலில் அல்லது பலன் நல்கிடும் கல்வியில் ஈடுபடுதல் .....18

4- எதிர்காலத்திற்கு முக்கியமளிப்பதை விட்டு விட்டு அன்றைய தினத்தின் செயற் பாடுகளுக்கு முக்கியத்துவமளித்தல் .......19

5- அல்லாஹ்வின் திக்ரை அதிகரித்தல் ......22

6- வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் அல்லாஹ் அளித்திருக்கும் அருட் கொடைகள் பற்றிப் பேசுதல் .....23

7. வாழ்வின் இன்பதுன்பங்களில் தனக்குக் கீழுள்ளவர்களின் நிலையை நோக்குதல் ....24

8. கவலை தரும் காரணங்களை நீக்கு வதில் சென்றுபோன துன்பங்களை மறப்பதன் மூலம் முயற்சி செய்தல் .....26

9. இம்மைக்கும் மறுமைக்கும் பயன் தருபவற்றிற்காக பிரார்த்தித்தல் ........27

10. தமக்கேற்பட்ட சிரமங்களை முடிந்தளவு குறைத்துக் கொள்ள முயற்சி செய்தல் ......29

11. பலமான உள்ளமும், அது தீய எண்ணங்களினால் உணர்ச்சி வசப்படாமலும் இருத்தல் ......30

12. அல்லாஹ்வின் மீதே முழு நம்பிக்கை கொண்டு அவன்மீதே உறுதி கொள்ளல் ......31

13. உதவிகள் செய்வதன் மூலம் தீமைகளை எதிர் கொள்ளுதல் ........33

14. தனக்கு நேர்ந்த துன்பங்களை இறைவனது அருட்கொடைகளைப் பற்றிச் சிந்திப்பதன் மூலம் எதிர் கொள்ளுதல் .......36

15. நன்மையின் பலனை அல்லாஹ்விடமிருந் தேயன்றி பிறரிடம் எதிர்பார்க்காமலிருத்தல்.....39

16. துன்பம் தரும் அந்நேர காரியங்களுக்கு முக்கியத்துவம் அளிக்காது அடுத்து வர விருக்கும் காரியங்களைக் கவனித்தல் ........42

17. பொருளடக்கம் .......43

العبيكان للطباعة التجارية
Obeikan
Commercial Printing

# الوسائل المفيدة للحياة السعيدة

تأليف

الشيخ عبد الرحمن بن ناصر السعدي

رحمه الله

باللغة التاميلية

وكالة المطبوعات والبحث العلمي
وزارة الشؤون الإسلامية والأوقاف والدعوة والإرشاد
المملكة العربية السعودية

١٤٣٤ هـ